## முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.

## அ.வ.எண்.118/2018

2026–ம் வருடம் மார்ச் திங்கள் 09–ம் நாளன்று 40 வது பிரதிவாதி தரப்பு சாட்சியாக பி.வா.சா.72–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்.** | : | **செங்கோட்டுவேலன்** | **தொழில்** | : | |
| **த/பெ.** | : | | **வட்டம்** | : | |
| **முகவரி** | : | | **மதம்** | : | |
| **ஜாதி** | : | | **வயது** | : | |

**ஆரம்பிக்கும் நேரம். 4.10**

**I.A.No.109/2026 என்ற மனுவில் 09.03.2026 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் 40 வது பிரதிவாதியின் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். 40 வது பிரதிவாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் பி.வா.சா.ஆ.354 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 16.10.2008 ஆம் தேதிய 40 வது பிரதிவாதி பெயரிலான கிரைய ஆவணம் எண்.6302/2008 பி.வா.சா.ஆ.355 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 09.03.2026 ஆம் தேதிய 40 வது பிரதிவாதி பெயரிலான வில்லங்க சான்றிதழ் ஆன்லைன் பதிவிறக்கம் பி.வா.சா.ஆ.356 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (**ஆவணம் முழுமையாக**

**இல்லாததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு குறியீடு செய்யப்பட்டது.)** கடந்த 09.03.2026 ஆம் தேதிய 40 வது பிரதிவாதி நாகரத்தினம் பெயரிலான கூட்டுப்பட்டா எண்.1336 ஆன்லைன் பதிவிறக்கம் பி.வா.சா.ஆ.357 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதிகள் தாக்கல் செய்த வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**1 முதல் 4, 6 முதல் 15, 18, 19, 21 முதல் 40, 42 முதல் 46, 48 முதல் 50, 52 முதல் 58, 60, 62, 63, 64, 65, 67, 68, 69, 70 முதல் 76, 78 முதல் 85, 87 முதல் 100, 102, 104 முதல் 105, 106, 114, 115 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

இல்லை.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

தும்பிவாடி கிராமத்தில் உங்களுக்கு பூர்வீக வகையிலோ, வேறு வகையிலோ சொத்துக்கள் உள்ளதா என்றால் இல்லை. எனது ஊரிலிருந்து தாவா சொத்து அமைந்துள்ள தும்பிவாடி கிராமம் சுமார் 70 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. 16.10.2008 தேதிய பி.வா.சா.ஆ.355 ஆவணத்திற்கு முன்பு வழக்கு சொத்து எவ்வாறு இருந்தது என்று உங்களுக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். உங்கள் பிரமாணவாக்குமூலத்தில் கூறியுள்ள ஐஎப்ஆர், செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவு ஆகியவற்றின் நகலை வாங்கி பார்த்துள்ளீர்களா என்றால் பார்க்கவில்லை. செட்டில்மெண்ட் தாசில்தார் பட்டா வழங்கியபோது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று உங்களுக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.355 எழுதிக்கொடுத்த நபர் மற்றும் அவரின் முன்பாத்தியஸ்தர்களுக்கு வழக்கு சர்வே எண் பூமிகளில் எவ்வித உரிமை பாத்தியமும் இல்லை என்பதால் பி.வா.சா.ஆ.355 ஆவணத்தை எழுதிக்கொடுப்பதற்கு அவர்களுக்கு சட்டப்படி உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. செல்லாத பி.வா.சா.ஆ.355 பத்திரத்தின் அடிப்படையில் அரசு அலுவலர்களை சட்டத்திற்கு புறம்பாக செல்வாக்குசெய்து பி.வா.சா.ஆ.357 பட்டாவை பெற்றுள்ளீர்கள் என்று

சொன்னால் சரியல்ல. காலவரையறை சட்டத்தின் கீழ் வாதிகளின் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளதாக நீங்கள் கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. உங்கள் பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள அனைத்தும் தவறானது என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.09 19:13:47 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.